காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

4—6—72

★

உள்ளே......

கலைஞருக்கு வாழ்த்துக்கள்! (தலையங்கம்)

★

காவியக் கனல் (இலக்கியம்)

★

நீலகிரி மாநாட்டில் கலைஞர்! (சிறப்புப் பேச்சு)

★

நீண்ட ஆசை! (சிறுகதை)

விலை 25 காசு

கலைஞர்

பிறந்தநாள் விழா சிறப்பிதழ்

கலைஞருக்கு

"என் இனிய வாழ்த்துகள்"

(திருமதி இராணி அண்ணு, M.L.C.,)

★

வையகப் பேரறிஞர் எண்ணிக்கையில் முதல் தங்கத் தம்பியாக வளர்ந்து வரும், மாண்புமிகு, டாக்டர் முதல்வர் கலைஞரின் 49-ம்வது ஆண்டு நிறை விழா வளர்ந்து உயர்ந்தது கண்டு, வாழ்த்தும் அளவுக்கு, காலத்தாய் என்னை வளர்த்திருப்பதைக் கண்டு, நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். அறிஞரில்லாத இடத்தைப் பூர்த்தி செய்வதற்கு கலைஞர் படும் பெரும்பாட்டை, நான் ஒவ்வொரு நாளும் கேட்டுக் கேட்டு மனக் கண்ணீர் வடிக்கிறேன்!

காரணம்! கலைஞர் எங்கள் குடும்பத்தில் ஒருவர், இன்னும் அதிகமாகச் சொல்லவேண்டுமென்றால் குடிசை வீட்டிலிருந்து கோபுரவாசிகள்வரை பயன்படுத்தும் உப்புக்கல்லைப் போன்றவர்! என் பேராசையெலாம் கலைஞர், நமது பகுத்தறிவுத் தந்தைப் பெரியாரைப்போல் நூறுண்டு காலம் வாழவேண்டுமென தமிழ்த் தாயைப் பணிகிறேன்.

அறிஞரின் வழியில் கலைஞர்!

(இரா. நலங்கிள்ளி நடராசன், M.A.,)

★

எங்களுயிர் அண்ணனவன்
சரித்திரத்தின்
இலக்கணம்போல் வந்துதித்த
புதுமைப் பித்தன்!
சங்கத்தமிழ் காத்துவந்த
மரபினைப் போல்
தமிழகத்தின் விடுதலைக்குப்
பாடு படும்
வங்கக் கடல் அலைகளைப்
போல் ஓய்வு; இன்றி
வாழ்க்கை யெலாம்
தமிழினத்தின் விடுதலைக்கு
தங்கக் குணக் கலைஞர்
செயல் மக்களுக்கு
தாயூட்டும் முதல் அமுத
மாகும், உண்மை!
அண்ணனிட்ட கட்டளையின்
வழியில் சென்று
அகில மகாக் கவிஞன், எனப்
பெயரைச் சூடி
உண்மையிலே! பிறவியிலே,
கலைஞ ஞக
உதித்திருக்கும் தமிழகத்தின்
மாண்பு மிகு!
வண்ணத் தமிழ்த் தாய்ப்
புதல்வன் பிறவிமேதை
வாழ்க! வென வாழ்த்து
கின்ற வையகத்துள்
பண்பகமாம் தென்னகத்துக்
காவலனை
பணிவோடு வாழ்த்து
கின்றேன் கலைஞர் வாழி!



காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 4—6—72 | இதழ் 47

கலைஞருக்கு வாழ்த்துக்கள்!

இந்தத் திங்கள் 3-ஆம் நாளன்று, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு 49-ஆவது அகவை தொடங்கி இருக்கிறது.

சென்ற ஆண்டு, டாக்டர் கலைஞர் அவர்கள், தமது பிறந்த நாள் விழாச் செய்தியாக, தமது பிறந்த நாளை, பிச்சைக்காரர்கள் மறுவாழ்விப்பு நாளாகவும், அதற்கு நிதி திரட்டும் பணியை மேற்கொள்ளும் நாளாகவும் அறிவித்திருந்தார். இந்த அறிவிப்புப்படி, தமிழகம் முழுவதும் பல இலட்சங்களைத் திரட்டி இருக்கிறார் அவர்.

அதுபோலவே, இந்த ஆண்டும் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளை, ஏழைகட்குக் கண்ணொளி வழங்கும் கவின்மிகு நாளாகக் கொண்டாடப்பட வேண்டும் என்று, நலத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்குச் செவி சாய்ப்பது தமிழகத்தின் தலையாய கடமையாகும். நிதியினை வாரி வாரி தமிழகம் வழங்கும் என்பதில் சந்தேகமில்லை.

"இசை மேம்படுக நின் கொற்றம்" என்று சங்க கால மன்னன் ஒருவனை, புலவர் ஒருவர் மனமாற வாழ்த்தியதாகப் புறப்பாடல் ஒன்றுண்டு

அதுபோல கலைஞர் அவர்களது ஆட்சித் திறம், நாளுக்கு நாள் மெருகேறிக் கொண்டிருக்கிறது.

அவர் முதலமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்டபோது சிலர் ஐயம் தெரிவித்ததுபோல் அல்லாமல், அதுபோன்ற ஐயங்களை யெல்லாம், பொய்யென ஆக்கிக் காட்டி, தமது நிதானப் போக்காலும், அணுகு முறைகளாலும் நிர்வாகத்தை மட்டுமல்லாமல், கழகத்தையும் வலுவடையச் செய்திருக்கிறார் என்பதில் எவருக்கும் ஐயமிருக்க முடியாது.

கலைஞர் அவர்கள் முதலமைச்சராக மட்டுமல்லாமல், சிறந்த நிருவாகியாகவும் இருப்பதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத சில காழ்ப்பு உள்ளங்கள், தங்கள் மன உளைச்சலை, எழுத்துக்களாகவும், பேச்சுக்களாகவும் அவ்வப்போது எடுத்துக் காட்டிக் கொண்டு வருவதை, தமிழ் மக்கள் கூர்ந்து கவனித்துக்கொண்டுதான் வருகிறார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும்போது, அந்த கூன் முதுகுக்காரர்களுக்குத் தகுந்த பாடமும் கற்பித்துக் கொண்டுதான் வருகிறார்கள்.

என்றாலும், கழகத் தோழர்களது பலமான ஒருமித்த கருத்துக்கொண்ட நல்லாதரவுதான், கலைஞருக்கு உண்மையான வலுவாக இருக்க முடியும்.

அந்த வலுவை அளிக்கத்தக்கவர்கள் நாங்களே என்று காட்டிக்கொள்ளும் வழியில், பேராசிரியர் அவர்கள் கோரியுள்ள நிதியை வாரிவழங்கவேண்டும் கழகத் தோழர்கள்.

இந்த நிதி குவியக் குவியத்தான், எதிரிகளது திரை விழுந்த கண்கள் திறக்கும். தெளியாத நெஞ்சகங்கள் தெளிவடையும். கலைஞரது ஆட்சியின் மாண்பும் சுடர்விடும்.

ஆனால், நிதி வசூலில் அரசுத் துறையும் சற்று அக்கறை காட்டவேண்டும். பள்ளி மாணவர்களிடத்துக்கூட நாலணா, எட்டணா, ஒரு ரூபாய் என்று சென்ற ஆண்டு அளவுக்கும் அதிகமான நிர்வாக நிர்ப்பந்தங்களைப் புகுத்தி, வசூலிக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்துப் பரவலான ஒரு அதிருப்தி இன்னமும் நீடித்துக் கொண்டுதா னிருக்கிறது. அதுபோல் இந்த ஆண்டும், பள்ளி மாணவர்களது உதவி எனும் பேரால், ஏழைப் பெற்றோர்களது மன உளைச்சலைப் பெற நினையாதவாறு, அரசுத் துறை சற்றே அக்கறை எடுத்துக்கொண்டால் நல்லது.

அப்போதுதான் அந்த ஏழை நெஞ்சங்களால் அரசுக்கு மட்டுமின்றி, கலைஞருக்கும் நல்வாழ்த்துக் கூறமுடியும்!

மின் கட்டணப் போராட்டம்!

கோவை மாவட்டத்துக்கே இதுவரையில் சொந்தமாக இருந்துவந்த மின் கட்டணக் குறைப்புப் போராட்டம், இப்போது திருச்சி மாவட்டத்துக்கும் பரவி இருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

இது குறித்துக் கலைஞர் அவர்கள் கருத்தறிவிக்கும்போது, இந்திய மாநிலங்களிலேயே, தமிழகத்தில் தான் மின் கட்டணம் குறைவு என்பதையும் எடுத்துக் காட்டி இருக்கிறார்கள்.

விவசாயிகள் என்பதன் பேரால், சிண்டிகேட் காங்கிரசுக் கட்சியினர்தான் இந்த கிளர்ச்சியினைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

எனவேதான் தமிழக முதல்வர் அவர்கள், காமராசர் விரும்பினால் இது குறித்து அவருடன் பேசத் தயார் என்று கூறி இருக்கிறார்கள்.

காமராசரைப் பொறுத்தமட்டில், முதலமைச்சரின் இந்த நல்ல சமிக்ஞையை ஏற்றுக்கொள்ள மாட்டார். ஏனென்றால் ஒரு பிரச்னை தீர்ந்து, அமைதி நிலவுவதை என்றுமே அவர் விரும்பியவரல்ல என்பதற்கு ஏராளமான எடுத்துக் காட்டுக்கள் உண்டு.

மின் கட்டணம் தொடர்பான சிக்கலில் உண்மையிலே நாட்டம் உடையவர்கள், கிளர்ச்சி முறைகளை விடுத்து, கலைஞர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளபடி பேச்சு வார்த்தைக்குத் தடம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

தமிழக அரசைப் பொறுத்தமட்டில் சிக்கலின் தன்மைக்குத்தான் முக்கியத்துவம் அளித்துக்கொண்டிருக்கிறதேயன்றி, சிக்கலுக்குரியோர் யார் என்பதிலே அக்கறை காட்டியதில்லை.

எனவே, பிரச்னை தீரவேண்டும் என்பதில் உண்மையான நாட்டமுடையோர் எவராயினும், உடனடியாக பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடுகளைச் செய்துகொள்வதுதான் புத்திசாலித் தனமானதாகும்.

அல்லாமல், சென்ற ஆண்டுபோல, 'துப்பாக்கிச் சூடு' அளவுக்குக் கொண்டுதான் போவோம் என்று முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தால், அது நாட்டுக்கும் நல்லதல்ல—நடத்துவோருக்கும் நல்லதல்ல!

—திருவாரூர் - முத்துராமன்

நாம்...?

(கவி. வில்லிபுத்தன்)

★

பாவேந்தன் பறந்திட்டான்
உலகை விட்டு
பழுத்த நிலா மெலிந்ததுபோல்
நோய்வாய் பட்டு
பூவேந்தன் தென்றல் வந்தான்
மூச்சைக் கேட்டான்!
பொன்னுடலை தமிழணங்கு
கனிபோல் கொண்டாள்
சாவோலை நீட்டிக் கொண்டாள்
"ஏண்டா...!" தம்பி?
—நன்றிகெட்ட
சமுதாய சம்மதத்தைக்
கேட்கவில்லை!
கோவிலுக்குள் குடியிருக்கும்
தெய்வத்தைப் போல்
குந்திவிட்டான் "புரட்சிக் கவி"
ஊமையாணுன்!

காவலிலா கைதிநிலா...
வளரும் தேயும்
கதையுனக்கும் புரிந்திருக்கும்
அதுபோல்; நாட்டின்
காவலுக்கு வந்து போவார்
கதைத் தொகுப்பு
காய்க்கு முன் உதிர்ந்துவிடும்
பூவே யாகும்!
நாவுக்குள் குடியிருக்கும்
ருசியைப் போல
நாடறிந்த நல்லோர்கள்
மக்கள் நெஞ்ச
நாவினிலே வாழ்கின்றார்
உண்மை! தம்பி!
நல்லதெலாம் "நா" ருசிபோல்
மறைந்தே நிற்கும்!



ஒருநாள் நாம் வாழ்ந்தாலும்
பூவைப் போன்ற
புனிதமிகு தியாகமதைச்
செய்து நாட்டின்
பெருமைக்கு உயிர்தானம்
செய்து, மக்கள்
பேணுகின்ற "தலைவன்!" என
வாழ்ந்து காட்டி
திருநாட்டின் விடுதலைக்கு
முரசொலித்த
செம்மலென வாழ்வதுதான்
வாழ்வே யாகும்!
உருவாகும் உனது தமிழ்
இலட்சியத்தை
உலகெங்கும் எடுத்துரைக்க
மறந்திடாதே!

இருக்கும்வரைப் பின்தொடரும்
கூட்டமெலாம்
இருவிழிகள் மூடிவிட்டால்
ஓடிச் செல்லும்
குருட்டுமதி படைத்தோரின்
நடுவினிலே
கொள்கைக்குப் போராடும்
உன்போல், நல்ல
அருமைமிகு தம்பிகளை
நம்பித் தானே
அண்ணன்! நான் ஓய்வு
கொண்டேன்! உண்மைதம்பி!
கருக்குழிக்குள் இருப்பதுபோல்
கல்லறைக்குள்
கண்விழிக்க முடியாது
தூங்குகின்றேன்!

"சாக்ரட்டீஸ்" சரிதமதை
உலகினுக்குத்
தந்தவனும், உலகமேதை
ப்ளாட்டோவைப் போல்
திக்குணத்தோர் மத்தியிலே
நீ யெனக்குச்
செய்துவரும் நன்றிக்கடன்
நானறிவேன்!
வாக்களித்த மக்களுக்கு
அறை குறையாய்
வாழ்வளித்து ஒதுங்கி
விட்டேன்! உலகரங்கில்
தேக்குமரம் போன்றிருக்கும்
நின்னிதயம்—மக்கள்
தேவையினைப் பூர்த்திசெய்யும்
இதுவே! உண்மை!

அறுபதாண்டுக் காலச்சுமை
சுமப்பதற்குள்
அண்ணன்! நான் பட்டபாடு
உலகறியும்!
பிறவியிலே இலட்சியத்தைச்
சுமந்த வந்த
பேரறிஞர் வாழ்த்துகின்ற
அன்புத் தம்பி!
உறவுமுறை யென்பதெலாம்
நமக்கு இல்லை,
உழைப்பெனும் தாய்வீடே
நமக்குச் சொந்தம்!
திறமையிலே நாமுயர்ந்தோம்
இதுவே யன்றி,
திருஞான சம்பந்தரின்
வாரிசா, நாம்?

★

தி. மு. கழகத்தில் சாக்ரடீசும், பெர்னாட்ஷாவும், ஷெல்லியும்

(காஞ்சி மணிமொழியார்)
கழகத் துணைப் பொதுச் செயலாளர்.

ஒருவருக்குப் பெருமையும் புகழும் சிறப்பும் மதிப்பும் அவர் தன் வாழ்க்கையை எப்படி அமைத்துக்கொண்டார் என்பதனால் ஏற்படுவன அல்ல; அவர் தன் வாழ்க்கையை எந்த அளவு அர்ப்பணித்தார் என்பதனால் ஏற்படுவனவாகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1935-ம் ஆண்டில் எம். ஏ. பட்டப் படிப்பை முடித்துக்கொண்டு கல்லூரியை விட்டு வெளிவந்தது முதல் 1969 பிப்ரவரியில் அமரவாழ்வு பெற்ற நாள்வரை முப்பத்திநான்கு ஆண்டு காலத்தில், வாழ்வின் ஒவ்வொரு துளி நேரத்தையும் தான் பிறந்து வாழ்ந்த மண்ணுக்கு ஒளிமயமான எதிர்காலத்தைக் காண்பதற்கும், மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சியைத் தோற்றுவிப்பதற்கும், ஏழைகளின் முகத்தில் என்றும் குறையாத புன்சிரிப்பு பூத்து மணம் வீசச் செய்வதற்கும், தமிழ் மொழியின் வளமும் நலமும் பெருக்குதற்கும் முழுமையாகஅர்ப்பணித்திருந்தார். அதன் காரணத்தாலேயே உலகத்தில் இன்றுவரை தோன்றிய வரலாற்றுச் சிறப்புடைய பெருமக்களில் ஒருவராக வைத்துப் போற்றத் தக்க நிலையையடைந்தார்.



தன்னைப்பற்றியோ, தன் குடும்ப நலனைப் பற்றியோ அவர் சிந்தித்துப் பார்த்ததில்லை. அதற்கு அவருக்கு நேரமேது. கல்லூரியில் அவர் பொருளாதார பாடத்தைப் படிக்கின்றபோது தேர்வுக்காக மட்டும் அதனைக் கற்காமல் உலக நாடுகளின் பொருளாதாரச் சிறப்புகளையும் திராவிட நாட்டுப் பொருளாதாரச் சீர்கேட்டையும் ஒப்பிட்டுப் பார்த்து உளங் குமுறினார். அந்நாடுகளிலுள்ள மக்கள் வாழ்க்கைப் பெருமிதங்களை வறுமையில் வாடும் திராவிடப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைச் சிறுமைகளோடு ஒப்புநோக்கி உள்ளம் நெகிழ்ந்தார். கல்லூரியை விட்டு வெளிவந்தபோது தான் படித்த பொருளாதாரம் நாட்டு நலனுக்குப் பயன்படப் பாடுபட வேண்டும் என்ற உணர்வே அவரிடம் தலைதூக்கி நின்றது.

வறுமைத் தேள் முற்ற ஏழைகளின் வாழ்வோடு விளையாடுவதைப் போலவே தன் வாழ்விலும் விளையாடிக்கொண்டிருக்கிறது என்பதை நன்கு உணர்ந்திருந்தும், தன் வீட்டுத் தேள்பற்றி கவலைப்படாமல் நாட்டில் செந்தேளும் கருந்தேளும் போல உலா வந்து கொண்டிருக்கும் ஏழ்மையையும் அறியாமையையும் போக்குவதற்குத் தன் முழுநேரத்தையும் அர்ப்பணித்து ஒய்வு ஒழிவின்றி அயராது உழைக்கத் தொடங்கினார்.

மறுமலர்ச்சி எல்லாத் துறைகளிலும் மறுமலர்ச்சி இதுவே அவரது இலட்சியமும் குறிக்கோளுமாகும். பொருளாதாரத்தில் மட்டுமா நாடு நலிவுற்றிருக்கிறது. எண்ணத்தில், எழுத்தில், மொழிப் பற்றில், அரசியல் அறிவில், ஒற்றுமை உணர்வில், கலையில் அத்தனையிலும் நலிவும் அறியாமையும் தோய்ந்து கிடப்பதைக்கண்டு அவற்றைத் தூய்மைப் படுத்துவதற்கான முயற்சியில் தன்னை ஒப்படைத்துக் கொண்டார். எனவே தன் சொந்த வாழ்வு பற்றிய சிந்தனை துளியளவும் எழவில்லை.

இன்று, அந்தப் பெருமகனாருடைய ஒப்புயர்வற்ற உத்தமருடைய— தமிழகத்தின் தலைமகனாக விளங்கி முதலமைச்சராக உயர்ந்த அறிஞர் பெருமகனாருடைய குடும்பம், இந்திய நாட்டின் தலைமகனாக புகழ்பெற்று உயர்ந்த குடியரசுத் தலைவர் லால் பகதூர் சாஸ்திரியின் குடும்பத்துக்கு ஒப்பான பொருளாதார நிலையில் இருந்து வருவதைக் காண்பவர்கள் எவரும் அவருடைய தன்னலமற்ற தூய்மையான அப்பழுக்கில்லாத பொதுநலத் தொண்டின் பெருமையை உணராமல் இருக்க இயலாது.

அண்ணா அவர்களைவிட வயதில் நான் ஒன்பது ஆண்டுகள் மூத்தவன். காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் அவர் கல்வி பயின்று கொண்டிருந்தபோது நான் நீதிக்கட்சியின் தொண்டனாகப் பொதுவாழ்வில் ஈடுபட்டிருந்தேன். 14 அல்லது 15 வயதினரான அண்ணா, நேரடியாக அக்காலங்களில் கூட்டங்களில் கலந்துகொண்டதில்லை. ஒதுங்கி

நின்று பேச்சாளர்களின் கருத்துக்களை உன்னிப்பாகக் கேட்காமல் விட்டதுமில்லை. அத்துடன் நான் அக் காலத்தில் கடைவீதியில் நடத்திவந்த தியாகராயர் வாசகசாலையிலும் தினந்தோறும் வந்து இலக்கிய ஏடுகளை யெல்லாம் படிக்கத் தவறியதுமில்லை. இவற்றின் விளைவாகத்தான் அவர்உள்ளத்தில் மறுமலர்ச்சி எண்ணங்கள் வளரத் தொடங்கின. பிற்காலத்தில் நீதிக்கட்சியில் அவர் தொடர்பு கொள்ளவும் அதன் செயலாளராக வரவும் இவைகளே பெரிதும் பயன் பட்டன என்று கூறுவது தவறல்ல.

கடல்போன்று விரிந்து பரந்த உள்ளமும் கண்டார் பிணிக்கும் கூரிய கண்களும், கலங்காத நெஞ்சுரமும், எளிய அடக்கமான பண்பும், எல்லோரையும் கவரத்தக்க கருத்துச் செறிவுமிக்க பேச்சு வன்மையும், இலக்கிய எழுத்து நடையும், சீர்திருத்த வேட்கையும் உலகத்தில் வேறு எவருக்கும் கிடைக்காத பெருஞ்செல்வங்களாய் அவருக்கு ஒருசேரக் கிடைத்திருந்தன. அதனுல்தான், அவர் வரலாற்றுக்குரிய நாயகனுய் உலகம் போற்றத்தக்க சான்ருேனுய் அறிஞர் பாராட்டும் பேரறிஞராய், பலகோடி மக்களின் உள்ளங்களை ஈர்த்துப் பிணைத்து இலட்சிய புரிக்கு அழைத்துச் செல்லும் ஏற்றமிக்க தலைவனுய், தமிழர் சமுதாயம் என்னும் குடும்பத்துக்கு ஒப்பற்ற ஒரே அண்ணனுய் விளங்கி என் போன்றவர்களில் நெஞ்சில் நீங்காது நின்று பொதுத் தொண்டில் எங்களை இயக்கிக் கொண்டிருக்கும் அமரராய்த் திகழ்கிருர்கள்.

1935-ல் அண்ணு கல்லூரியை விட்டு வெளிவந்தார். 1936-ல் அவருடைய பேச்சாற்றலையும், எழுத்து வன்மையையும் எல்லோர்க்கும் உணர்த்தும் எண்ணத்தோடு இரண்டு அமைப்புகளை நானும்



நண்பர் பி. என். குருசாமி போன்றவர்களும் ஏற்படுத்தினேம். இரண்டும் நான் நடத்திய அச்சுக் கூடக் கட்டடத்திலேயே அமைந்தன. ஒன்று 'யங் கிரிடிக் அசோசியேஷன்' என்பது மற்ருென்று நவயுகம் என்ற வார ஏடு, ஞாயிறுதோறும் அண்ணுவின் ஆங்கிலச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. இளைஞர் கூட்டம் ஆங்கிலச் சொற்பொழிவினைக் கேட்டு மகிழ அங்கே நாளுக்குநாள் பெருகியது. அண்ணுவின் பேச்சு அனைவரையும் அப்படிக் கவர்ந்தது. சனிக்கிழமைதோறும் 'நவயுகம்' என்ற ஏடு வெளிவந்தது. அண்ணுவின் தமிழ் எழுத்து நடையைக் கண்டு எல்லோரும் வியந்தனர். எங்கெங்கிருந்தோ பாராட்டுகள் குவிந்தன. இதன் பயன் அண்ணு 'விடுதலை' இதழுக்கு ஈர்க்கப்பட்டார். உள்ளங்கவரும் தலைப்புக்கள் — உணர்ச்சியூட்டும் தலையங்கக் கருத்துக்கள் மக்களிடையே விடுதலை இதழுக்கு மோகம் ஏற்பட்டு வளர்ந்தது.

திராவிட இயக்கத்தின் இலட்சியங்கள்தானே அண்ணுவின் இலட்சியங்களும். எனவே அவருடைய மறுமலர்ச்சித் தத்துவங்கள் விடுதலை மூலம் மெல்ல மெல்ல வெற்றிபுரிக்கு அவரை அழைத்துச் சென்றன. தன் இலட்சியங்களில் அண்ணு அமரரானபோது முழு வெற்றி பெற்றுவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

அண்ணு இலட்சியப் பாதையை வகுத்துக் கொடுத்து 'அதோ தெரியுது பார் பாதை. நடை போடுங்கள்' என்று தன் தம்பிகளுக்கு ஆணையிட்டவர் அல்லர்; தானே முதலில் வழி காட்டிச் சென்று பின்னுல் மற்றவர்களை வருமாறு நடத்திச் சென்றவர். மறுமலர்ச்சித் தூதுவராகவே அவர் இருந்து விடுவதில்லை. மறுமலர்ச்சித் தொண்டராக இருந்து எல்லாத் துறைகளிலும் அவற்றிற்கு முன்னேடியாக நின்றவர்.

பேச்சுத் துறை—எழுத்துத் துறை—அரசியல் துறை—நாடகத் துறை—கலைத் துறை — இலக்கிய துறை எல்லாவற்றிலும் அவருடைய மறுமலர்ச்சித் தொண்டு ஊடுருவியது. புதுமை எண்ணங்கள் அந்தத் துறைகள் அத்தனையிலும் பூத்தன. ஒவ்வொரு துறைக்கும் தனிச் சிறப்பும் முழுத் தன்மையும் பெற்ற வல்லுநர்களை அவர் படைத்துத் தந்தார் அரசியலிலும் அத்தகைய வல்லுநர்களை அவர் உருவாக்க தவறவில்லை. இதனை உணராத மாற்ருர்கள், அண்ணுவுக்குப் பின் தி. மு. கழகத்துக்கு அஸ்தமனந்தான் எனக் கனவு கண்டனர். அந்தக் கனவு பொய்த்தது தன் வாரிசுகளான தம்பிகளை அரசியல் மேதைகளாய் அவர் உருவாக்கிச் சென்றிருப்பதை இன்றைய தமிழக அரசினைப் பார்ப்பவர்கள் உணர்வார்கள்.

கலைஞர் நாவலர் பேராசிரியர் போன்ற தம்பிமார் பலரை கழகத்தின் புதுச்சக்திகளாக விட்டுச் சென்றிருக்கிருர் சாக்ரடீஸ். பெர்னுட்ஷா. ஷெல்லி போன்ற பேரறிஞர்கள் பலரும் ஒரே நேரத்தில் ஒரே நாட்டில் ஒரே இயக்கத்தில் ஒன்ருகப் பணியாற்றுவது போன்ற சிறப்பு இவர்களால் நாட்டுக்கு ஏற்பட்டு வருகிறது. அந்தச் சிறப்புப் பற்றி பிற மாநிலத்தார் பாராட்டுகின்றபோது நாம் பூரிப் படைகிருேம். பாராட்டுக்குரியவர்களாய்த் தம்பிமார்களை உருவாக்கிய பெருமைக்குரிய அண்ணனை தலைவனை நினைத்து அவர் திருவடிகட்கு நம் நன்றி உணர்வெனும் மலர்ச் செண்டுகளைக் காணிக்கையாக்கிப் படைப்போமாக. அண்ணன் புகழை நாளும் போற்றி வளர்ப்போமாக. *

நீண்ட ஆசை!

கோடை வெய்யில் தலையில் சுட்டு மண்டையைப் பிளந்து விடுவதுபோல இருந்தது. பாதங்களிலோ நெருப்பை கட்டிக் கொண்டு நடப்பதுபோல இருந்தது. எந்தவித அனலையும் கவனிக்காமல் வேகமாக நடந்த அந்தத் தென்னந் தோப்பில் நுழைந்தாள் அஞ்சலை.

‘சுந்தரம் அடிக்கடி தொந்திரவு செய்து கேட்டுக்கொண்டிருப்பதை கொடுக்க முடியவில்லையே, இன்று எப்படியும் கொடுத்து விடவேண்டும்’ — என்றுதான் படபடத்த நெஞ்சத்துடன் தோப்பில் நுழைந்து சிறித் நேரமாகியும் அந்த சுந்தரம் வரவே இல்லை.

“நீ...போ...உன் பின்னாலேயே வருகிறேன்” என்று சொன்னாரே, என்று நினைத்துக்கொண்டு அவன் வரவேண்டிய வழியை அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தாள்.

‘இங்கேயே நேரமாகிவிட்டால் அவர் கோபித்துக் கொள்வாரே! அவர்தான் சுந்தரத்தின் அப்பா.

சுந்தரத்தின் அப்பாவும், சுந்தரமும் ஒரு வாரத்திற்கு முன்புதான் சென்னையிலிருந்து வந்தார்கள். அவர் சென்னையில் ஒரு பஸ் கம்பெனிக்கு முதலாளி. பெரும் பணக்காரர். அவர், கிராமத்தில் இருக்கும் நிலத்தைப்பராமரிக்க கோடை காலத்திலெல்லாம் வருவார். அவர் ஊட்டி, கொடைக்கானல் என்றெல்லாம் போவது கிடையாது. அப்படி போய்க் கொண்டிருந்தால் ஒரு பஸ் கம்பெனிக்கு மட்டுமே முதலாளியாக இருந்த அவர் பல ஏக்கர் நிலபுலன்களுக்கும் சொந்தக்காரர் ஆகமுடியுமா...?

பல ஏக்கர் சொந்தமாகிவிட்ட பிறகு நீர் அற்றக் கிணறு ஒன்று இருந்ததால், அதில் சரியாக தண்ணீர் கிடைக்கவில்லை; இட்ட பயிர் வெளுத்துக் கொண்டிருந்தது என்று அஞ்சலையின் கணவன் கடிதம் எழுதியபோது சென்ற கோடைக்கு வந்து இருந்தான். சுந்திரத்திற்கும் கோடைக்கு கிராமத்திற்கு வருவதென்றால் கொண்டாட்டம்தான்.

சென்ற ஆண்டு, கிணற்றை ஆழப்படுத்த ஆட்களை விட்ட மறு நாளே நல்ல மழை பெய்து எங்கும் வெள்ளக் காடாகிவிட்டது.

— ஆபுத்திரன் —

ஆனால்.........! இந்த வருஷம். சென்ற ஆண்டைவிட இரண்டு மடங்காக கோடையில் தண்ணீர்ப் பஞ்சம். அதனால்தான் இந்த ஆண்டாவது கிணற்றை ஆழப் படுத்திவிடுவது என்று ஆட்களை விட்டிருந்தார் சுந்திரத்தின் தந்தை விஜயராகவன்.

அந்தக் கிணறு வெட்டும் வேலையில்தான் இறங்கி இருந்தாள் அஞ்சலையும். சூரியன் உச்சிக்கு வரவே மதிய உணவும் ஓய்வும்பெற கரைக்கு ஏறினார்கள்.

கரையை ஏறியதும்தான் அந்தக் கடும் வெய்யிலையும் கவனிக்காமல் தோப்புக்குள் நுழைந்து அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறுகதை!

சென்ற ஆண்டு கோடைக்கு வந்தபோதே அஞ்சலையைக் கண்டிப்பாக கேட்டிருந்தான் “எனக்கு நீ நிச்சயமாகக் கொடுக்கத்தான் வேண்டும்” என்று. அதற்குள் மழை பெய்து விடவே சந்தர்ப்பமின்றி சென்னைக்கே சென்றுவிட்டான்.

‘அவரின், அந்த நீண்ட நாள் ஆசைதான் இன்னும் நிறைவேறாமல் இருக்கிறதே’ என்று அஞ்சலைக்கும் வருத்தம்தான். அதே நேரத்தில் பயமும் கூட. சுந்தரம் பெரும் பணக்காரவீட்டுப் பிள்ளை. அஞ்சலையோ...சுந்தரத்தின் நிலத்தில் வேலை செய்யும் ஒரு கூலிக்காரனின் மனைவி. இந்த நிலையில் சுந்தரம் கேட்பதைக் கொடுப்பதா... அவன் தந்தைக்கு அஞ்சுவதா... இதையெல்லாம் நினைத்து அவள், ‘வேண்டவே வேண்டாம்’ என்றும் மறுத்து இருக்கிறாள். அவன்தான் விடுபவனாகவே இல்லையே!

ஒருநாள் கிணற்றில் வேலை செய்துவிட்டு மதிய உணவு உண்டு கொண்டிருந்தபோது சுந்தரம் அங்குவந்தான். அவன் ஏற்கனவே அஞ்சலையைக் கேட்டிருந்ததால் அந்த அறிமுகத்தில் இருவர் முகத்திலும் ஒருமென்னகை தவழ்ந்தது!

அப்போதும் அவன் கேட்டான்.

அவள், அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்களைக் காட்டினாள். அதனால் அவன் அமைதியாக இருந்துவிட்டான்.

அன்று மாலை, வேலை முடிந்து கரையேறிக் கொண்டிருந்தார்கள். சுந்தரம் அப்போது அங்குதான் இருந்தான். சுந்தரத்தின் தந்தை கூலியாட்களுக்கு பணத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தார்,

அஞ்சலையைப் பார்த்து சுந்தரம் கை ஜாடைக் காட்டிக்கொண்டிருந்தான். அருகில் யார் யாரோ இருக்கவே அதை, அவள் கவனித்த தாகவே காட்டிக் கொள்ளவில்லை.

அவள், கவனியாதுபோல இருக்கவே அங்கிருந்து சென்றுவிட்டான்.

கூலியை வாங்கிக் கொண்டவர்கள் வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தார்கள். அஞ்சலையும் அவள் கணவனுமே இருந்தார்கள். அந்த இருவரும் பெற்றுக் கொண்டதும் அஞ்சலையைப்பார்த்து நான் கடப்பாரையை 'கூர்' பிடித்துக் கொண்டுவர பக்கத்து ஊருக்குப் போய் வருகிறேன். நீ பத்திரமாக வீடுபோய்ச் சேர்" என்று சொல்லிவிட்டு, அவன் அதோ மறைந்துவிட்டான்.

அவன் மறையும் வரை அங்கேயே நின்று கொண்டிருந்த அவள், வீட்டிற்குப் போகத் திரும்பினாள்.

அப்போது சூரியன் மலைகளின் மறைவில் விழுந்து அதிக நேரமாகிறது என்பதைக் காட்டிக் கொண்டு இருள் சுரந்துக்கொண்டிருந்தது.

'இருட்டிவிட்டால் எப்போது போய் சமைப்பது' என்று, சிறிது வேகமாக நடந்து, இரண்டு பக்கமும் நெச்சில் செடிகள் அடர்ந்த ஓடைக்குள் நடந்தாள்.

செடிகள் அடர்ந்து அதிகமாக இருக்கவே இருளும் அதிகமாகவே தெரிந்தது.

ஓடையில் பாதியைக் கடந்து இருப்பாள். 'திடீர்' என்று அவள் நெஞ்சை உலுக்குவதுபோல் ஒரு பிரமை! திடுக்கிட்டுத் திரும்பினாள். சுந்தரம்தான் அவளின் சேலைத் தலைப்பை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தான்.

"ஏன் பயப்படறே அஞ்சலே... பயப்படாதே, எதுக்கு பயப்படணும்? இங்கு யார் இருக்கிறார்கள். இன்றைக்கு நீ. மறுக்காமல் கொடுத்துத்தான் தீரவேண்டும் அதற்காக உனக்கு எவ்வளவு வேண்டுமென்றாலும், கொடுக்கிறேன். உன் கணவன்கூட இல்லை தைரியமாகவே சுலபமாக முடித்து விடலாம்"

மண்ணாங்கட்டி !

"நான் மண்ணாங்கட்டிதான்! மண்ணைத் தோண்டினால் வைரமும், தங்கமும் இருப்பதுபோல — என் இதயத்தைத் திறந்தால் அங்கே அன்பும், பாசமும் இருக்கும்! என் உள்ளமோ அத்தனையும் தங்கம்!"

—அறிஞர் அண்ணா

"சுந்தரம் எனக்கென்னமோ பயமாக இருக்கிறது. இது யாருக்காவது தெரிந்தால் என் கணவர் என் தோலை உரித்துவிடுவார். நீங்க பரவா இல்லை பணக்கார வீட்டுப் பிள்ளை."

"நான் பணக்கார வீட்டுப் பிள்ளையாய் இருக்கவேதான் உன்னிடம் கெஞ்ச வேண்டியதாகி விட்டது அஞ்சலை."

சிறிதுநேரம் சிந்தனைக்குப் பிறகு "சரி கொடுத்தால் என்ன குறைந்தா போய்விடப் போகிறோம். கொடுக்கிறேன் ஆனால் இன்று இல்லை."

"ஏன், இன்று இல்லை"

"என் கணவர் வீடு திரும்பிக் கொண்டிருப்பார் அவர் வந்து விட்டால் பெரும் சிக்கல்தான். நாளை வாருங்கள்" என்று சொல்லி விட்டு வேகமாக வீட்டுக்கு வந்து விட்டாள்.

மறுநாள் அஞ்சலையைச் சந்தித்தபோது "ஐயா இன்று முடியாது இன்று நான் வீட்டில் நுழையக்கூடாது இன்னொரு நாளைக்கு எந்த வேலை இருந்தாலும் மறுப்புச் சொல்லமாட்டேன்" என்றாள்.

சுந்தரம் அடிக்கடி ஏமாற்றத்தால் துவண்டு தேறிக்கொண்டிருந்தான்.

மீண்டும் நான்காவது நாள் சந்தித்தபோது "இன்று எப்படியும் கொடுத்துவிடுகிறேன், வாருங்கள்." என்றாள்.

கிணற்று மண்ணை வெளியே கொண்டுவந்து கொட்டிக் கொண்டிருந்தார்கள். மணி பதினொன்றைத் தாண்டிக் கொண்டிருந்தது. சுந்தரம் அங்கு வந்தான். அவன் வருவதைப் பார்த்துவிட்ட, அவள், "தோப்புக்குப் போங்கள் வருகிறேன்" என்றாள் சைகையிலே—

"நீ போ உனக்கு பின்னாலேயே வருகிறேன்" என்றான். அவனும் சைகையிலே.

அவன் சென்றுவிட்ட பிறகு தான் மண்டையை பிளக்கும் வெய்யிலில் தோப்புக்கு வந்தாள். அவனைக் காணவில்லையே என்று நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தபோது, தூரத்தில் சுந்தரம் வருவது தெரிந்தது.

அவனைப் பார்த்துவிட்ட, அவள், பயத்தால் நடுங்குபவள்போல் குடிசைக்குள் நுழைந்தாள், குடிசையைச் சுத்தம் செய்தாள். அங்கு மூலையில் இருந்த பாயை எடுத்து விரித்துப் போட்டாள்.

சுந்தரமும் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே குடிசைக்குள் நுழைந்து விட்டான்.

அங்கு ஏற்கனவே விரித்துப் போட்டிருந்த பாயில் உட்கார்ந்தான்.

சிறிது நேரத்தில் அவன் வந்த வேலை முடிந்துவிட்டது. வெளியே வந்து வாயைக் கொப்பளித்து உமிழ்ந்துவிட்டு வெற்றி நடை போட்டான் சுந்தரம்.

அவன் சென்ற பிறகு கீழ்தாடையின்மீது 'ஆள்'காட்டி விரலை வைத்துக்கொண்டு 'அடப் பாவமே! அப்பா அடிப்பார் அவருக்குத் தெரிந்தால் என்பதற்காக யாருக்கும் தெரியக்கூடாது என்று பலவந்தமாக விடுவேனா என்று ஆக்கி வைத்த 'கூழ்' அனைத்தும் குடித்து விட்டாரே இந்த சின்ன வயசிலேயே' என்று ஆச்சரியத்துடன் அவன் சென்ற வழியைப்பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆம். பன்னிரண்டு வயதைத் தாண்டக்கூடிய வயதுதான் சுந்தரத்திற்கு. கூழ் குடிக்க வேண்டுமென்ற அவனின் நீண்ட நாள் ஆசை இன்றுதான் நிறைவேறியது.

★

பிரிவினை வரும் என்று நாங்கள் ஒருநாளும் மிரட்டவில்லை!

பிரிவினையைத் தடுத்து நிறுத்தும் சக்தியும் தி.மு.க. ஒன்றுக்குதான் உண்டு!

குழப்பவாதிகள் குற்றச்சாட்டுக்கு நீலகிரி மாநாட்டில் கலைஞர் மறுப்பு

மாநில சுயாட்சியை பிரிவினைக் கோரிக்கை என்று கூறிப் பொய்மைச் சாயம் பூசிடும் பொல்லாங்குப் பேர்வழிகளுக்கும் குழப்பவாதிகளுக்கும் இன்று நீலகிரி மாவட்ட மாநாட்டில் இறுதிப் பேருரையாற்றிய கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், தக்க அறிவுரை தந்தார். பிரிவினை வரும் என நாங்கள் ஒருநாளும் மிரட்டவில்லைஎன்று அவர் திட்டவட்டமாகக் கூறினார். பிரிவினை என்று ஒன்று வந்தால், அதைத் தடுத்து நிறுத்தும் சக்தியும் கழகத்திற்கே உண்டு என்றும் அவர் கூறினார்.

கழகத் தலைவர் இறுதிப் பேருரை ஆற்றுகையில் குறிப்பிட்டதாவது : தி.மு. கழகம், மாவட்ட மாநாடு களை மிக சீரோடும் சிறப்போடும் நடத்தி வருகிறது. இங்கு நடைபெறுகின்ற மாநாடானாலும், திருச்சி, வேலூர், ராஜபாளையம், காஞ்சிபுரம், மன்னை ஆகிய மாவட்ட மாநாடுகளானாலும் - நான் மன்னார்குடியில் குறிப்பிட்டதுபோல் ஒன்றையொன்று விஞ்சுகின்ற அளவில்தான் சிறப்பாக அமைகின்றது.

அந்த வகையில் நீலகிரி மாநாடு மற்ற மாநாடு களை விஞ்சுகின்ற வகையில் ஒரு சிறப்பான அம்சத்தைப் பெற்றிருக்கிறது.

மன்னார்குடி மாநாட்டைவிட இந்த மாநாட்டுக்கு இருக்கின்ற சிறப்பு என்னவென்றால் எந்த மாநாட்டின் ஊர்வலத்திலும் இதுபோல பல்லாயிரக் கணக்கான மக்கள் சாலையோரம் நின்று கண்டு களித்ததில்லை என்ற சந்தேகத்தை நண்பர்கள் எழுப்பினார்கள். அவர்களில் என்னையும் இணைத்துக்கொள்கிறேன்.

இங்கே அமைக்கப்பட்ட பந்தல் சிறியதாக இருந்தாலும்—அதன் முகப்பும் கொட்டகையும்—விதானமும் மன்னார்குடி மாநாட்டை வெற்றிகொள்ளும் வகையில் அமைந்திருந்தன.

இந்த நீலகிரியில், மலைகளின் ராணி என்று அழைக்கப்படும் இடத்தில், மேகங்கள் தழுவுகின்ற இடத்தில், வளம் செழித்திருக்கும் இடத்தில், இயற்கை அழகு கொஞ்சிப் பேசும் இடத்தில், ஏற்றம் பெறும் வகையில் மாநாட்டினை நடத்த அரும்பாடுபட்ட நண்பர்கள் முருகேசன், ராஜு, மாதாகவுடர், செயபால், அன்பன், பேப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் கருணைநாதன், தேவராசன், மற்றும் நீலாண்டியம்மாள் மற்றும் நகராட்சி மன்ற உறுப்பினர்கள் செயல் திறமை மிக்க கழக கண்மணிகள் அனைவரையும், கழகத் தலைவன் என்ற முறையில் தலைமைக் கழகத்தின் சார்பில் பாராட்டி வாழ்த்தி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்கமாக நாம் நடத்தும் மாநாடுகளின் வசூலை அந்தந்த மாநாட்டிலே அறிவிப்பது வழக்கம். வேறு சிலர் நடத்தும் மாநாட்டில் அதுபோன்று மாநாட்டின் வசூலை அறிவிப்பது இல்லை.

நீலகிரியில் முதன் முதலாக நடைபெறும் இந்த மாநாட்டில் மன்னார்குடி மாநாட்டில் கிடைத்தது போல் மூன்று லட்சம் ரூபாய் கிடைக்கும் என்ற எண்ணத்தில் இங்கு வரவில்லை. ஆனாலும் இந்த மாநாட்டுக்குத் தக்கபடி ரூ. 49 ஆயிரம் வசூலாகியிருக்கிறது என்பதை அறிவிப்பதில் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நீலகிரி மலையில் ஒரு அரசியல் கட்சி மாநாட்டை முதன்முதலாக நாம்தான் நடத்தியிருக்கிறோம். எற்கனவே கூனூரில் தி. மா. மு. க. மாநாடு நடைபெற்றிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் நாங்கள் பொதுக் கூட்டம்—சிறப்புக் கூட்டங்களில்தான் பேசி வந்திருக்கிறோம்.

கழக வரலாற்றில்—நீலகிரி வரலாற்றில் தி. மு.



இன்பத்தைப் பெற்றுயர்ந்தோம்!

★

சொல்லே அடுக்கி, சொற்சுவை தான்கொண்டு
நம்மைக் கவர வந்தார் — நாட்டின்
கைமை ஒழிக்க வந்தார் — பின்பு

சொல்லே அடுக்கியும், சொற்சுவை தான்கொண்டும்
பேசப் பழக்கி வந்தார் — நம்மை
பேசப் பழக்கி வைத்தார்.

ஏழை எளியாரை வாழ்விக்க வேண்டியே
திட்டங்கள் தீட்டி வைத்தார் — நாட்டின்
சட்டங்கள் மாற்றி வைத்தார் — பின்பு

கோழை மனிதரைக் கூவி யழைத்தவர்
கொள்கை குவித்து வைத்தார் — நாட்டின்
குன்றுபோ லாக்கி வைத்தார்.

தமிழை இகழ்ந்தாரைத் தரைமட்ட மாக்கிட
தவியாய்த் தவித்து வந்தார் — தக்க
தருணத்தை நோக்கி வந்தார் — பின்பு

அமிழ்தாம் தமிழ்ப்பகை இந்தி எதிர்த்தவர்
அன்னைக்குத் தொண்டு செய்தார் — தமிழ்
அன்னைக்குத் தொண்டு செய்தார்.

அண்ணா — இதயத்தில் வாழ்ந்திருந்தோம்;
அங்கே—இன்பத்தைப் பெற்றுயர்ந்தோம்.

— கவிஞர். பன்னீர்ச்செல்வன்.
ஆத்தூர்.

கழக மாநாடு நடத்தி வெற்றி பெற்றிருப்பது சாதாரணமானதல்ல.

ஊர்வலத்தில் மக்கள் காட்டிய ஆர்வத்தைப் பார்த்து நேற்றே மலர்க் காட்சி ஆரம்பித்துவிட்டது என்று கூறினால் மிகையாகாது. குழந்தைகள் வண்ண வண்ண ஆடைகளை உடுத்தி சாலையோரங்களில் வந்து நின்றதைப் பார்த்தபோது, இன்றே மலர்கள் பூத்தது போல் இருந்தன.

சீசரைப் பற்றிச் சொல்லும்போது, அவன், சென்றேன்—கண்டேன்—வென்றேன் என்று சொன்னான் என்று சொல்லுவார்கள். ஆங்கிலக் கவர்னர் கர்சன் பிரபு இந்த உதகை மக்களைப் பார்த்து—'உதகை வந்தேன்—கண்டேன்—உங்களால் வெல்லப் பட்டேன்!' என்றார். அதுபோல நானும்—நாவலரும் கழகச் செயலாளர்களும் உதகைக்கு வந்தோம்—கண்டோம்—உங்களால் வெல்லப்பட்டோம் என்கிற அளவில் இந்த மாநாடு சீரும் சிறப்புமாக அமைந்திருக்கிறது.

அண்ணாவே அவரது தமிழில் பாராட்டினால் தகும்!

இந்த ஆற்றல் மறவர்களை வண்டமிழால் பாராட்டுவதா—செந்தமிழால் பாராட்டுவதா-பைந்தமிழால் பாராட்டுவதா? முடியாது, முடியாது. அண்ணா அவர்களே பிறந்து வந்து அவர் தமிழால் பாராட்டினால்தான் பொருத்தமாக இருக்கும்.

நீலகிரியில் முகாமிட்டிருந்த காமராசர், கூட்டத்திற்குக் கூட்டம் இந்த மாநாடு பற்றிப் பேசினாராம். இதை அவர் விளம்பரம் செய்தார் என்றே இங்கு நண்பர்கள் கூறினார்கள். விளம்பரம் செய்தாரோ, வெறுப்பைக் கொட்டினாரோ—அவரைப்பற்றி நமக்குக் கவலையில்லை.

ஆனால், நாம் மாநாடு நடத்தும் மாவட்டங்களிலெல்லாம், மாநாட்டுக்கு முன்பாக அவர் சுற்றுப் பயணம் செய்கிறார். ராஜபாளையத்திற்கும் வந்தார். இப்போது இங்கேயும் வந்து போயிருக்கிறார். ஆனால், இங்கே அவர் உடல்நிலை கருதிக்கூட வந்திருக்கலாம். அவர் அப்படிப் பேசுகிறாரே, மிரட்டுகிறாரே என்று நாம் அஞ்சத் தேவையில்லை.

"தி. மு. கழகம்தான் கட்சிகளில் நிலையானது. இதுபோல நான் ஒருஅரசைப் பார்த்ததில்லை. சின்ன பையன்கள் என்னை விட—பக்தவத்சலத்தைவிட நன்றாக ஆட்சி நடத்துகிறார்கள்" என்றா அவர் பாராட்டுவார்?

இந்திரா காங்கிரஸ்தான் நமக்கு முதல் எதிரி என்று ஆசைத்தம்பி பேசினார்.

தி. மு. கழகத்திற்கு, தமிழகத்தைப் பொறுத்தவரை காமராசர் காங்கிரஸ்தான் மாற்றுக் கட்சியே தவிர, வேறு எந்தக் கட்சியும் அல்ல.

ஒருவேளை நாளையோ, நாளை மறுநாளோ, அல்லது அடுத்த மாதமோ எப்படி மாறுமோ எனக்கு ஜோசியம் தெரியாது.

நமக்கு எதிரிகள் யார் என்று பார்ப்பதைவிட, நம்மை யார் எதிரிகள் என்று கருதுகிறார்கள்—நமக்கு எதிராக யாரெல்லாம் படை திரட்டுகிறார்கள் என்பதைத்தான் பார்க்கவேண்டும்.

இவர்கள்தான் நம் எதிரிகள் என்று நாம் சொல்லாமலே, நம்முடைய விளக்கங்களைக் கேட்கும் மக்கள் அவர்களை அடையாளம் தெரிந்து கொள்வார்கள்.

"உடுமலை நாராயணன் அல்ல; வைகுண்ட நாராயணனே வந்தாலும் எதிர்ப்பேன்" என்று சொன்ன சுப்பிரமணியத்தையே நண்பராக ஏற்றுக் கொண்டவர்கள் நாம்.

இந்த ஐந்தாண்டுக் காலத்தில் என்ன சாதித் தீர்கள் என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார் காமராசர். கம்யூனிஸ்டுகளும் கேட்கிறார்கள்.

பாண்டிச்சேரியில் கம்யூனிஸ்ட் நம்மோடு இணைந்துள்ளது. அங்கே முற்போக்கு, இங்கே மட்டும் பிற்போக்கா? கிளியனூர் வரையில் தி மு. க. முற்போக்கு, அதற்கு அப்பால் பிற்போக்கா?

சுதந்தரா கட்சி கூட நம்மை வீழ்த்த நினைக்கிறது.

தமிழ் நாட்டில் இருக்கிறதா, இல்லையா என்று கருதத்தக்க நிலையிலுள்ள ஜனசங்கம்கூட நமக்கு எதிராகக் குரலெழுப்புகிறது.

எப்படிப் பார்த்தாலும் கழகச் சாதனையே அதிகம்!

இந்த நீலகிரி மாவட்டத்தில்—காங்கிரஸ் ஆட்சியிலும் சரி. அதற்கு ஒரு ஐம்பதாண்டுகள் முன்னால் எடுத்துக் கொண்டு கணக்குப் பார்த்தாலும் சரி— இந்த ஐந்தாண்டுக் கால கழக அரசின் சாதனையே அவைகளைவிட அதிகம்.

காங்கிரஸ் ஆட்சியில் நீலகிரி மாவட்டத்தில் எத்தனை தடுப்புஅணைகள் கட்டியிருக்கிறார்கள் என்று பார்த்தால், ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்பது போல் ஒன்றே ஒன்றுதான் கட்டியிருக்கிறார்கள்.

இந்த ஐந்தாண்டுக் கால கழக அரசில் மட்டும் இந்த மாவட்டத்தில் 22 தடுப்பு அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

இன்னும் 11 அணைகள் முடியும் தருவாயில் இருக்கின்றன.

இன்னும் 30 அணைகள் கட்டுவதற்கான திட்டம் தீட்டி வேலை நடந்து கொண்டிருக்கிறது.

2,500 ஏக்கர் பாசன வசதியை இன்று நாம் இங்கு தந்திருக்கிறோம்.

1967 வரையில் இங்கே 45 குழாய்க் கிணறுகளே இருந்தன. இந்த ஐந்தாண்டில் புதிதாக 61 கிணறுகளை வெட்டித் தந்திருக்கிறோம்.

முன்பு இந்த மாவட்டத்தில் நீரேற்று எந்திரங்கள் 45 தான் இருந்தன. இப்போதோ புதிதாக 61 போடப்பட்டிருக்கிறது.

அவர்கள் நாடாண்ட காலத்தில் இந்த மாவட்டத்தில் விவசாயக் கிடங்குகள் அறவே இல்லை. நம்முடைய ஆட்சி வந்தபின் 7 விவசாயக் கிடங்குகள் இங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றன.

காங்கிரஸ் ஆட்சியில் இங்கு 1,196 விவசாயக் கருவிகளே வழங்கப்பட்டன. எங்களால் விவசாயக் கருவிகள் பெற்று இங்கே 3,827 பேர் பயன் பெற்றிருக்கிறார்கள்.

67 வரை கால்நடை வினியோகத்தில் உயர்ரக ஆடுகள் இந்த மாவட்டத்தில் 220-தான் வழங்கப்பட்டன. 72 வரை நாம் 1,127 ஆடுகள் வழங்கியிருக்கிறோம்.

அன்று அவர்கள் வழங்கிய உயர்ரகக் கோழிகள் 4,251-தான். நாம் இந்த ஐந்தாண்டில் வழங்கியிருப்பதோ, 8933 ஆகும்.

இரு பிஞ்சு உள்ளங்களின்
நெஞ்சை உருக்கும் கதை!

சென்னை ஓடியன்
பிராட்வே
கிருஷ்ணவேணி
சயானி
மற்றும் தென்னாடெங்கும்

ஸ்ரீ நவநீதா பிலிம்ஸ் அளிக்கும்
கனிமுத்துப் பாப்பா
S.P. முத்துராமன்



51 முதல் 67 வரை அவர்கள் 217 கிராமங்களின் குடிநீர்ப் பிரச்னையைத்தான் தீர்த்தார்கள். நாமோ இந்த ஐந்தாண்டில் 293 கிராமங்களின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கியிருக்கிறோம்.

பாசன் பள்ளத்தாக்கு குடிநீர்த் திட்டத்திற்கு, சென்ற ஆண்டில் நான் இங்கே அடிக்கல் நாட்டினேன். உதகையில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு உல்லாசப் பயணிகள் இங்கு வராமல் இங்குள்ளவர்கள் வெளியூர் போகிற நிலை நேர்ந்தபோது அந்தத் திட்டத்தை 1969-ல் 40 லட்ச ரூபாய் செலவில் தொடங்கி வைத்தோம்.

குடிநீர்த் திட்டத்திற்காக குன்னூரில் 55 லட்சம் ரூபாய்—கோத்தகிரியில் 25 லட்சம் ரூபாய் கழக அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1969-ம் ஆண்டில் இந்த மாவட்டத்தில் மட்டும் 13 லட்சத்து 97 ஆயிரம் ரூபாய் அளவுக்கு வறட்சி நிவாரணப்பணி செய்யப்பட்டது. ரூ. 14 லட்சத்து 50 ஆயிரத்தில் தீவிர வேலை வாய்ப்புத் திட்டமிடப்பட்டது. புதிதாக பத்து உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டன.

மின்சார வசதி முழுமை பெற்றிருக்கிறது!

நீலகிரி மாட்டத்தில் மின்சாரம் இல்லாத இடமே இல்லை என்கிற அளவுக்கு செய்யப்பட்டு முன்சார முழுமை விழாவே நடைபெற்றிருக்கிறது.

இங்கே மலைசாதி மக்கள் வாழ்கிற இடங்களில் காங்கிரசார் நாடாண்ட காலத்தில் மின்சார வசதி கிடையாது. இந்த ஐந்தாண்டுக் கழக ஆட்சியில் மலைசாதி மக்கள் வாழும் பல கிராமங்கள் மின்வசதி பெற்றிருக்கின்றன.

அரிசன மக்களும், மலைசாதி மக்களும் வாழ்கின்ற பல கிராமங்களில் அவர்கள் ஆட்சிக்காலத்தில் இல்லாத அளவுக்கு இணைப்புப் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. குடிநீர் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கூட்டுறவுத் துறையில் ஒரு கோடி ரூபாய் செலவில் எட்டுத் தேயிலைத் தொழிற்சாலைகள் துவங்கப்பட்டு அதற்கென எட்டாயிரம் ஏக்கர் நிலத்தையும் தொழிற்சாலையோடு இணைத்து—வேலையின்மையால் ஏற்படும் நெருக்கடியைத் தவிர்த்திருக்கிறோம்.

வடுக இளைஞர் சங்கக் கட்டிடத்துக்காக இடம் கேட்டபோது ஐம்பதாயிரம் பெறுமானமுள்ள இடத்தை இந்தஅரசு இலவசமாகவே தந்திருக்கிறது.

வெறும் நாலு லட்சம் மக்கள் மட்டுமே வாழ்கின்ற நீலகிரி மாவட்டத்தில் மட்டுமே கழக அரசு இந்தச் சாதனைகளை இன்னும் பல சாதனைகள் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் சாதித்திருக்கிறது.

இந்த அரசைப் பார்த்துத்தான் ஐந்தாண்டுக் காலத்தில் என்ன சாதித்திருக்கிறீர்கள் என்று கேட்கிறார் காமராசர்!

கழக அரசில் ஆலைத் தொழிலாளர்களுக்கு காட்டப்படும் அன்பு—பாட்டாளிகளிடம் காட்டப்படும் பரிவு — தோட்டத் தொழிலாளர்களிடம் கொண்டுள்ள கருணை, கொஞ்சமா? நஞ்சமா?

விவசாயிகளுக்கு குடியிருப்பு மனை வழங்கியிருக்கிறோம். ஏழை எளியவர்களுக்கு நிலப் பட்டா கொடுத்திருக்கிறோம்.

நாம்தான் சமதர்ம விரோதிகளாம்; தேர்தல் அறிக்கையை மீறுகிறோமாம்!

சமதர்ம திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகத்தை விட வேறு எந்த மாநிலமாவது தீவிரமாக இருக்கிறதா? காட்டமுடியுமா?

> தி. மு. க. ஒரு பூசனிக்கொடி! காய்த்த காய்களின் பாரம் தாங்காமல் அது கொல்லை முழுதும் படர்ந்து கிடக்கிறது.
>
> அத்திக்காய் எட்டாத உயரத்தில்தான் காய்த்துத் தொங்குகிறது. சின்னகாய்: மரமோ உயரம்.
>
> பெரிய பூசனிக்காய்—மரத்தில் அல்ல—நிலத்தில் படர்ந்திருக்கும் கொடியில் காய்க்கின்றன.
>
> இது நமது தோட்டத்து கொடி. இப்படிப்பட்ட நம் குலக்கொடியை அறுத்தெறிந்து விட்டால்—இந்தத் தலைமுறையில் இது போன்ற ஒரு இயக்கத்தை உருவாக்கவே முடியாது.
>
> "பேரறிஞர் அண்ணா"

நில உச்சவரம்பு சட்டத்தைக் கேரள அரசுதான் போட்டதாம். அங்கே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். கழக அரசு செய்யாத எதை கேரள அரசு புதிதாகச் செய்திருக்கிறது? நான் கேட்கிறேன்—நீங்கள் தீவிரவாதிகளா? நாங்கள் தீவிரவாதிகளா?

எவரிட்ட பிச்சை!

உச்சவரம்பு சட்டத்தை அவர்கள் போட்டார்கள். ஆனால் அதிலிருந்து பலரைத் தப்பிக்க வழி செய்திருக்கிறார்கள். தி.மு.க.அரசின் செயல்முறை திட்டங்கள் நாங்கள் போட்ட பிச்சைதான் என்று அங்கே ராஜேஸ்வரராவ் என்ற ஒருவர் பேசியிருக்கிறார்.

தி. மு. கழகத்தின் ஆதரவை மட்டுமல்ல, தி. மு. கழகத்திடம் பணமே பெற்றுக்கொண்டு தேர்தலில் நின்ற அவர்களைப் பற்றிய கணக்கு நம்மிடம் இருக்கிறது. அதைப் பார்த்தால் தெரியும், யாருக்கு யார் பிச்சை போட்டிருக்கிறார்கள் என்று!

கருணாநிதி மாநில சுயாட்சி கேட்கிறாராம். "அமெரிக்காவின் ஏஜண்டான அவரா கேட்பது? அவர் எந்த முறையில் கேட்கிறார்?" என்று கூடப் பேசியிருக்கிறார் அந்த ராஜேஸ்வரராவ்.

அமெரிக்காவுக்குப்போய் வருகிறவர்கள் எல்லாம் அமெரிக்க ஏஜண்டு என்றால் ரஷ்யாவுக்குப் போய் வருகிறவர்கள் எல்லாம் ரஷ்ய ஏஜண்டுகளா? சீனாவுக்குப் போய் வருகிறவர்களெல்லாம் சீன ஏஜண்டுகளா?

நாங்கள் மாநில சுயாட்சி கேட்பது—மாநிலங்களைப் பலப்படுத்தி, அதன்மூலம் மத்திய அரசைப் பலப்படுத்திடத்தான் மாநில சுயாட்சியே தவிர, இந்தியாவை பலப்படுத்த அல்ல.

நம்முடைய மாநில சுயாட்சிக் கோரிக்கையை பிரிவினை என்று கூறும் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன்.

எங்கள் மாநில சுயாட்சிக் கோரிக்கை பிரிவினை வாதம் அல்லவே அல்ல. அப்படியே பிரிவினை வந்தாலும் அதைத் தடுத்து நிறுத்தும் வலிமை கழக அரசுக்குத் திட்டவட்டமாக உண்டு என்பதை திட்டவட்டமாகக் கூறிக் கொள்கிறேன்.

காவியக் கனல்

(புலவர் அரிமதி தென்னகன்)

4. படையல்

ஒரே விநாடி உங்கள் கண்களை மூடிக்கொண்டு, உருவெளித் தோற்றம் என்பார்களே, அதை உணரும் உள்ளத்தை மட்டும் கொஞ்சம் திறந்துவிடுங்கள்!!

இதோ...... இராவணகாவியம்! மஞ்சள் வண்ண மேலுறையில், செவ்வண்ணம் வரம்புகட்ட, பெரிய எழுத்துக்களில் "இராவண காவியம்" என்னும் பெயர் கரிய வண்ணத்தில் மிக மிக எடுப்பாகக் காட்சி தருகிறது!! கீழே, நூல் ஆசிரியர் பெயர். செவ்வண்ணப் பின்னணியோடு, கருவண்ணத்தில் பொலிவோடு பொறிக்கப்பட்டு உள்ளது. பக்கங்களைப் புரட்டுகிறோம்; இராவணகாவியத்திற்கே அடிப்படையானபழந்தமிழகத்தை விளக்கிக் காட்டும் வரை படம் ஒன்று, பழமையாகிப்போனாலும், நெஞ்சை விட்டகலாத வரலாற்று நினைவுகளைக் கிளறிவிடுகிறது; எதையெதையோ எண்ணுகிறோம், 'உம்' என்று பெருமூச்சொன்றை விடுகிறோம்!! என்ன செய்வது என்னும் ஏக்கத்தோடு அடுத்தப் பக்கத்தைத் திருப்புகிறோம். பாவேந்தரின் திருவுருவப்படம் நம் பார்வைக்கு விருந்தாகிறது. பெருமூச்சுவிட மட்டுமே தெரிந்த நம்மைப் பார்த்து கேலி செய்வதுபோல சிரிக்கும் அந்தக் கண்களையும், வாளை மீன் துண்டாக வைத்துள்ள மீசையையும், 'எழுந்தவிட்டார் தமிழரெனின் இமயமும் பொடியாகும்; எதிர்ப்போருண்டா?' எனக்கேட்பதுபோல் காட்சிதரும் புன்னகையும் நம்மைப் புல்லரிக்கச் செய்கிறது. அடுத்த பக்கத்தில் அண்ணனின் அழகுருவம்; அதற்கடுத்து நம் கலைஞர்; அடுத்துக் காண்பது காவியப்புலவர் குழந்தையவர்கள்; பக்கத்திலேயே படையல்!!

படையலா அது! இராவண காவியம் கூர்வாள் என்றால், படையல் அந்த வாளின் கூர்மை!! காவிய மரத்தின் ஆணிவேர்!! காவிய மாளிகையின் கடைக்கால்!! குழந்தைப் புலவரின் கொள்கைப் பிழிவு!!

படையலைப் பார்ப்போம்!!

நூலெழுதுவோர், தம் நூலை எவருக்கேனும் காணிக்கையாக்கி, தம் நன்றியைக்காட்டிக் கொள்வதுபோல்' குழந்தையவர்கள் இராவண காவியத்தைக் காணிக்கையாக்குகிறார்; தான் படைத்த காவியத்தைப் படையலாக்குகிறார். யாருக்கு? தங்கச் சுரங்கத்தை, வைரப்புதையலை, தமிழ் மணிக்குவியலை எவருக்குப் படையலாக்குகிறார்?

தமிழனை நிமிரவைத்த தன் தலைவர் தந்தை பெரியாருக்கா? இல்லை!! தாய்மொழி தமிழுக்கா? இல்லை!! பின்வேறு எவருக்குத்தான் தன் காவியத்தைப் படையலாக்குகிறார்?

அவரே கூறுகிறார்......

"வருங்காலத் தமிழர்க்குப் படைக்கின்றேனே"

எவ்வாறு படைக்கின்றாராம்?

தமிழில் மாபெரும் காவியமாக, தமிழின் பெருமைக்குரிய காவியமாக, தமிழின் பெருமையென்னும் நூலில், பெருமைக்குரிய ஒரு ஏடாக இராவணகாவியத்தை வருங்காலத் தமிழர்க்குப் படைக்கின்றாராம் புலவர். பாடலைக் கேளுங்கள்:—

"பைந்தமிழின் பேரேடா வருங்காலத்
தமிழர்க்குப் படைக்கின்றேனே!!"

தமிழில் எழுதப்பெற்ற மாபெரும் காவியமாக, தமிழின் பெருமையென்னும் வரலாற்றின் பெருமைக்குரிய ஒரு ஏடாக என்றெல்லாம் பொருள்கொள்ளத் தக்கவகையில் "பைந்தமிழின் பேரேடா" என்னும் வரி அமைந்துள்ள பாங்கினை நாம் எண்ணியெண்ணி இன்புறவேண்டும்.

இந்நூலை எதற்காக அவர் தமிழர்க்குப் படைக்கின்றார்? காவியங்கள் இல்லையே என்னும் குறைகளை நீக்குவதற்காகவா? தடுக்கி விழும் இடமெல்லாம் தமிழன் காவியங்களைத்தானே காணுகிறான். பின் வேறெதற்காக?

தமிழின் சுவையினைத் தமிழன் அறிந்து கொள்ளுதற்காக என்றால் அதுவும் இல்லை!!

பின் வேறெதற்காக?

தூங்கும் தமிழினம் துள்ளி எழுதற்காக!!

தமிழன் ஏன் தூங்குகிறான்?

தன்னை மறந்தான்; தன் நாட்டை மறந்தான; தன் மொழியை மறந்தான்; தனக்கெனக்கண்ட தன்னிகரில்லாப் பண்பாட்டை மறந்தான்; எனவே விழிப்பதை மறந்தான்! மானத்தையே மறந்து மயங்கிக்கிடக்கும் தமிழனுக்கு மருந்தாக இக்காவியத்தைப் படைப்பதாகக் கூறுகிறார் புலவர்.

தமிழினம் 'தம் தமிழின் பண்பாட்டை அறிந்துகொள்ள வேண்டும்'.

'அறிந்தபின் அதன்படி நடக்க வேண்டும்.'

'அதன்படி நடந்து, இன்பமாக வாழவேண்டும்!'

அந்த இன்பமும் தவறான இன்பமாக, தகுதிக்குக் குறைவான இன்பமாக இல்லாமல், தகுதியோடு கூடிய இன்பமாக இருக்க வேண்டும்!!

அதற்கொரு தூண்டுகோலாக, துணையாகவே இராவண காவியத்தைப் படைப்பதாகக் கூறுகிறார் புலவர்.

புலவரின் ஆசை, புல்லர்கட்குப் பொல்லாத ஆசையாகப் படலாம்! ஆனால், தமிழனுக்கு, உண்மைத் தமிழனுக்கு புலவரின் ஆசை போர் முரசின் ஓசையாக அல்லவா இருக்கும்!!

தம் தமிழின் பண்பாட்டை அறிந்துகொள்ள,

அறிந்துகொண்டு கடைப் பிடித்திட,

கடைப்பிடித்துக் களிப்போடும், தகுதியோடும் வாழ இராவண காவியத்தைத் தமிழர்க்குப் படைக்கின்றார் குழந்தை.

எத்தகைய இராவண காவியத்தை?

"இராவணன் பெருஞ்சீர் இனிது பேசும்,

செந்தமிழின் பூங்காவாம் இராவண காவியம்"-என்கிறார் காவியப்புலவர்.

இராவணனுடைய மறைக்கப்பட்ட பெருமையைச் சீரழிக்கப்பட்ட சிறப்பை இனிதாகப் பேசும் இராவண காவியம் ஒரு தமிழ்ப் பூங்காவாம்!!

இலக்கியம்

கம்பன்கூட இராவணனின் பெருமையைச் சிற்சில இடங்களில் 'போனுல் போகட்டும்' என்று புகழ்ந்து கூறியுள்ளான். ஆனுல் படிப் போர்க்கு இராவணனின் பண்பு கள் இனிதாகப் படும்படியாகப் பேசினுரு? இல்லை!! கம்பனுடைய காவியம் இராவணனைப் 'பேசி' யதே தவிர இனிதாகப் பேச வில்லை!! ஏன்? இராமன் கம்பனுக் குத் தெய்வம்! ஆனுல், இராவ ணன் 'இரக்கமில்லா அரக்கன்'!! எனவேதான், எவருக்கோ உரியவனை ஏத்திப் புகழ்ந்த இராமாயணம் தமிழ்ப் பூங்காவாக உருவாக முடியவில்லை.

கங்கைக்குக் காவிரியை உவமை யாக்கினுன், அயோத்தியைக் காட் டும்போது சோழ நாட்டை நினைத் தான் என்றுதான் கம்பனைப் பாராட்டுகிருர்களே தவிர, கம்பன் தன் காவியத்தைத் தமிழ்ப் பூங்கா வாகப் படைத்தான் என்று துணி வோடு கம்பதாசர்களால் சொல்ல முடியவில்லை.

எனவேதான் இராவண காவி யப் புலவரால், தன் நூலை 'செந் தமிழ்ப் பூங்கா' என்று செம்மாந்த நெஞ்சோடு சொல்ல முடிகிறது.

இராவண காவியம் செந்தமிழ்ப் பூங்கா என்ருல் காவியத்தில் உள்ள பாடல்கள் மலர்களாக ஆகின்றன. மலர்களில் தேனில்லா மலர்களும் உண்டல்லவா!! தன் காவியப் பாடல்கள் அனைத்தும் தேனுள்ள மலர்கள் என்கிருர் பாவலர். இராவண காவியம் என் னும் நூல் தேன் பாக்களால், அதாவது தேனெனச் சுவை தரும் பாடல்களால் ஆகியது என்பதை,

"செந்தமிழின் பூங்காவாம்
இராவணகா
வியம் எனும்இத் தேம்பா நூலை"

—என்னும் அடிகளால் நமக்குத் தெளிவாக்குகிருர் புலவர்.

இராவண காவியம், இராவண னின் பெருமையைப் பேசுகிறது; சிறப்பை இனிது பேசுகிறது; செந் தமிழின் பூங்காவாகக் காட்சி தருகிறது; தேனனைய பாக்களைக் கொண்டுள்ளது; அழியாத புக ழைக் கொண்டுள்ளது; எல்லாம் சரிதான்! ஆனுல், அந்த இராவ ணன் யார்? இப்படி,

எல்லாம் அறிந்த சிலர் கேட்க லாம் அல்லவா!!

அதற்கு, இரண்டே சொற்களில் விடை தருகிருர் குழந்தை.

எப்படி......?

"எம்—தமிழன்"

யாரந்த இராவணன்?

"எந்தமிழன்!!"

இந்த இரண்டே சொற்களால் இராவணனுக்கும் நமக்கும் உள்ள உறவினைத் தெளிவாக்குகிருர் புல வர் குழந்தை.

இராவணன் எங்கள் முன்னுேன்; எங்கள் மூதாதை; எங்கள் தலை வன்; எங்கள் உறவினன் என்பதை இதைவிட வேறெவ்வாறு சொல்ல முடியும்.

பாவேந்தர் அவர்கள், "என் தமி ழர் மூதாதை, என் தமிழர் பெரு மான்; இராவணன்காண்" என்று கூறியுள்ளதையும் ஈண்டு நாம் எண்ணி இன்புற வேண்டும்.

'இராவணன் உங்கள் மூதாதை தான்; அவன் பெயரால் ஏன் காவி யம் இயற்றவேண்டும்; அவன் செய்ததென்ன?' என்று எல்லாம் புரிந்த சிலருக்கும் கேட்கதோன்று மல்லவா!!

அதற்கும் விடை தருகிருர் குழந்தை.

எவ்வாறு?

"செந்தமிழ்க்கா வாழ்ந்த இரா வணன்"

இராவணன் என்றவுடன், பத் துத் தலைகளும், இருபது கைகளுமே நினைவுக்கு வருமாறு கொடிய உருவமாகப் படைக்கப்பட்டு, மக் கள் முன்னே உலவவிட்டான் கம்பன்!

மாற்ருன் மனைவியை விரும்பிய பாவி, தெய்வச் சீதையைச் சிறை யிட்ட தீயவன், இராமனை எதிர்த்த அரக்கன் என்று நம்புவதே புண் ணியம் என்று கிடந்த நாட்டு மக்களுக்கு உண்மையான இராவ ணனைக் காட்டுகிருர் 'செந்தமிழ் மொழிக்காக, செந்தமிழ் மொழி காக்க 'வாழ்ந்த —' இராவணன் என்று.

செந்தமிழ் நலத்திற்காக, வளத் திற்காக, வாழ்விற்காக, வளர்ச்சிக் காக வாழ்ந்த இராவணன் என் பதை, 'செந்தமிழ்க்கா வாழ்ந்த' என்னும் அடிகளால் 'சுள்' என உறைக்குமாறு சொல்லியுள்ளார் புலவர்.

தமிழ்க்கே வாழ்ந்த இராவணன் என்ருல், இராவணன் தமிழர்க்காக வாழ்ந்தவன், தமிழ் நிலத்திற்காக வாழ்ந்தவன், தமிழ்க் கலைக்காக வாழ்ந்தவன், தமிழ்ப் பண்பாட்டிற்காக வாழ்ந்தவன் என்றுதானே பொருள்!!

எனவேதான் இரத்தினச் சுருக்க மாக இவ்வாறு கூறியுள்ளார்.

தாய் மொழியை மறந்தால் தாயகம் உண்டா? தன்னினம் உண்டா?

இனம், நாடு கலை, பண்பாடு எல்லாவற்றிற்குமே அடிப்படை மொழி என்பதை அறிவுறுத்தவே காவியப் புலவர் இராவணனை 'செந்தமிழ் மொழிக்காக வாழ்ந்த வன்' என்று மட்டும் குறிப்பிட் டுள்ளார்.

'செந்தமிழ்க்கா' என்னும்தொட ருக்குச் செந்தமிழ்க்காக என்று பொருள் கொள்வதோடு, செந் தமிழ்ச் சோலை என்றும் பொருள் கொள்ளலாம். 'கா' என்ற ஒரெ ழுத்துச் சொல்லுக்குச் சோலை என்ருலும் பொருளுண்டு.

எனவே, இராவணன் செந் தமிழ்ச்சோலையாக இருந்த பண்டைத் தமிழகத்தில் வாழ்ந் தவன், செந்தமிழ் இலக்கியச் யில் வாழ்ந்தவன் என்றும் நாம் பொருள்கொண்டு பூரிக்கலாம்.

காவியப் புலவர் இக்கருத் தோடும் இச்சொற்களை இணைத்துப் பாடியிருக்கலாம் என்பதற்கும் என்று எண்ணி மகிழ் வதற்கும் தடை போடுவா ருண்டா?

இவ்வாறெல்லாம் இராவண காவியத்தின் சிறப்பினைக்கூறித் தமிழர்க்குப் படைக்கும் புலவரவர் கள் 'வருங்காலத் தமிழர்க்கு' என்று ஏன் சொல்லியுள்ளார்கள்!!

"தமிழர்க்குப் படைக்கின்றேனே" என்று மட்டில் சொல்லியிருக்க லாமே!! பின் எதற்காக வருங்காலத் தைச் சேர்த்துக் கூறியுள்ளார்கள்?

ஒருவேளை......

தன்காலத்தமிழர்க்கு, தற்காலத் (இருபதாம் நூற்ருண்டு) தமி ழர்க்கு இப் படையலைப் பெறும் தகுதியில்லை என்று கருதுகிருரா?

ஏன் இருக்கக்கூடாது?

இக்காலத் தமிழன் தான் இராம பஜனை செய்பவனுக இராம் லீலா வில் இராவணன் உருவம் கொளுத் தப்படும் இழிசெயல் பற்றிக் கவலைப்படாதவனுக இராவ ணனைப் புகழ்ந்தும் ஒரு நூலா என்று தடைபோடுபவனுக, இராவணகாவியத் தடை நீக்கத்தை எதிர்ப்பவனுக கம்பன் விழாவில் களிப்பவனுக இருக் கின்ருனே இருக்கப் போகின்ருனே

18-6-72 முதல்
புலவர் தி. நா. அறிவு ஒளி
எழுதும்
புதிய சமூகத் தொடர்கதை
?

என்று நினைத்துத்தான் தமிழனோடு 'வருங்காலத்தைச்' சேர்த்தாரா?

தமிழனின் நீண்ட நெடுந்தூக்கத்தைக் கண்டு வெதும்பி, இவன் எங்கே இப்போது விழிக்கப் போகின்றான் என்று எண்ணித்தான் தமிழனோடு 'வருங்காலத்தைச்' சேர்த்தாரா?

ஆற்றல்மிக்க, அருமையான தெளிவென்னும் மாத்திரையை உண்மைத்தேனில் குழைத்துக் கொடுத்தாலும், இக்காலத்தமிழனின் இராமமயக்கம் போகாது என எண்ணித்தான், தமிழனோடு 'வருங்காலத்தை' இணைத்தாரா?

வருங்கால மனிதன்தான் தமிழனாக நிமிர்வான் உணர்வால் குறுகி உள்ளத்தால் கூனாகி இருப்பவன் இக்காலத் தமிழன் என்று கருதித் தான் தமிழனுக்கு 'வருங்காலத்தைத்' துணையாக்கினாரா?

இருந்தாலும் இருக்கலாம்!!

ஏதும் இல்லாமலா வருங்காலத்தோடு தமிழனை உறவாக்கினார்!!

இப்படிப் பொருள் கொண்டாவது நாம் இப்படையலை உரிமையாக்கிக் கொள்வோமே!!

எப்படி......?

எதிர்காலம் என்ற சொல் இந்த வினாடிக்கு அடுத்த வினாடியையும் குறிப்பதுதானே. வருங்காலம் என்ற சொல். 'படையல் பாட்டை' முடித்த அடுத்த கண்ணிமைப் பொழுதையும் குறிப்பதாகத் தானே பொருள். எனவே, வருங்காலத் தமிழர் என்ற சொல் நம்மையும் குறிப்பதாகக் கொண்டு இராவண காவியப் படையலை நாம் ஏற்போமாக!!

உழவனுக்குக் கழனியில் காட்சி தரும் நாற்றுக்கள் வருங்காலப் பயன்!! அதுபோல் காவியப் புலவருக்கு, இளநாற்றாகத் தெரிந்த வளர்ந்துவரும் சமுதாயமே வருங்காலத் தமிழராக, வளர்ந்து வரும் பயனாகப் பட்டிருக்க வேண்டும். கதிர் அறுக்கப்பட்டு மொட்டையாக நின்ற வெற்றுப் பயிருக்குக் காவியத்தைப் படைத்துக் காணும் பயனில்லை என்று கருதியே இளம்பயிராக நின்ற எதிர்காலத் தமிழினத்திற்கு இராவண காவியத்தைப் படைத்துள்ளார் என்பதை எண்ணிப் பார்த்தால்,

"வருங்காலத் தமிழர்க்குப் படைக்கின்றேனே" என்னும் தொடரில் தொக்கி நிற்கும் ஆயிரமாயிரம் உணர்ச்சிகளை நன்கு அறியலாம்.

படையலில் காணும் பல்சுவைகளையும் ஒருமுறை நினைவுக்குக் கொண்டு வாருங்கள்.

"இராவணன் நந்தமிழ்மூதாதை செந்தமிழ்க் காவில், செந்தமிழ்க்காகவே வாழ்ந்த சீராளன். அத்தகைய இராவணனின் பெருமையினையும் சிறப்பினையும் இனிதாகக் கூறும் செந்தமிழ்ப் பூங்காவே இராவண காவியம். இந்நூல் அழியாத புகழோடு, இனிய தேனையொத்த பாக்களைக் கொண்டது. இந்நூலை, தமிழின் பண்பாட்டை உணர்ந்து, அதன் வழி நடந்து, இனிமையாகவும், தகுதியோடும் வாழ்வதற்காக, தமிழின் பெருமைக்குரிய காவியமாக வருங்காலத் தமிழர்க்குப் படைக்கின்றேன்"

காவியப் புலவரின் படையல் பாட்டில் பொதிந்துள்ள பொருளை உணர்ந்தோர், தேவையெனில் காவியத்தைத் தேடிப் பாடலைப் படித்து இன்புறத் தடையேதும் உண்டோ!!

★

Southern Zonal Office of

Hindustan Aluminium Corporation Ltd.

75/9, POONAMALLEE HIGH ROAD,

MADRAS-10.

Telephone: 661021-2 Telegram: 'HINDALCORP'

For Anything & Everything in Aluminium

Please contact us.

வண்ணத்துப்பூச்சி தரும்
உன்னத பட்டுகள்

கோ-ஆப்டெக்ஸ்

''நீலவான் ஆடைக்குள்
நடமாடும் விண்மீன்கள்;
வண்ணங்கள் பலகோடி,
எண்ணங்கள் இன்பம் தரும்;
தறியில் பிறக்கின்ற,
ஆடைகளைக் கண்டிடுவீர்!
உங்களைக் கவர்ந்திடும் ஓர்
கோ-ஆப்டெக்ஸ் புடவை!''

வண்ணத்துப் பூ வழங்கும் நேர்த்தியான
அழகுமிக்க அசல் நடைகள் தென்ன
கத்தின் தனிச் சிறப்ப கோ ஆப்டெக்ஸ்,
உன்னதமான தரத்திற்கு உத்திரவாதமளிக்-
கிறது. தறியிலிருந்து நேராக வந்திருக்கும்
புத்தம் புதிய கைத்தறி ஆடைகள்!
கோ-ஆப்டெக்ஸ், கைத்தறி
நெசவாளர்களின் கைத்திறன்
பெருமைப்படத் தக்கதாகும்.
விற்பனையாளர்களின் கனிவு ஒரு
இனிய நல்வரவு.

Criterion CO 2666

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.